JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

MC.No.20/2023 Date:30.01.2026 R.W. 1 / LW

| | |
|---|---|
| பெயர் | திரு. ஷியாம் சுந்தர் |
| தந்தை பெயர், க/பெ | திரு. குமார் |
| முகவரி | எண்.192, 8 வது மெயின் ரோடு, கோமதி புரம், திருநின்றவூர் |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | அப்பாவின் பெட்டி கடையை பார்த்து வருகிறேன். |
| மதம் | |
| வயது | 31/2026 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 30th day of January 2026.

**மனுதாரர் ஆஜர் எதிர்மனுதாரர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை.**

நான் தாக்கல் செய்துள்ள எதிருரை, முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் மற்றும் சொத்து மற்றும் கடன் பற்றிய அறிக்கை ஆகியவற்றில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். எனக்கு ஆங்கிலம் எழுத்து கூட்டி படிக்க தெரியும். முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள அனைத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். எனது திருமணம் நிச்சியக்கப்பட்ட திருமணம் ஆகும். திருமணத்தின் போது எனது மனைவி தரப்பில் 18 சவரன் தங்க நகைகளும், 1 3/4 கிலோ வெள்ளி பொருட்களும், 10 கிலோ எவர்சில்வர் பாத்திரங்களும் கொடுத்தார்கள். எங்களது தரப்பில் மனுதாரருக்கு 3 சவரன் தங்க நகை கொடுத்தோம். பிரமாண வாக்குமூலத்தில் 4 வது பத்தியில் நான் ரூ.70,000/- தொகை செலவு செய்தேன் என குறிப்பிட்டுள்ளேன். அதை எதற்கு செலவு செய்தேன். அது எதற்கான செலவு செய்தேன் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் நாங்கள் கோவிலில் திருமணம் வைத்துக்கொள்ளலாம் என்றும் சொன்னோம். மனுதாரர் தரப்பில் மண்டபத்தில் திருமணம் வைக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதனால் எனது பங்கு தொகையாக ரூ.70,000/- தொகையை மனுதாரரின் அண்ணனிடம் கொடுத்தேன். மனுதாரரின் அண்ணனிடம் பணம் கொடுத்ததிற்கு புகைப்படமோ அல்லது வேறு ஏதெனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரமாண வாக்குமூலத்தில் SSLC படிப்பில் 40 சதவீதம் மதிப்பெண் பெற்றதாக குறிப்பிட்டுள்ளேன். அதற்கு அந்த சான்றிதழை தாக்கல் செய்யவில்லை. தற்போது தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் SSLC படிப்பில் 40 சதவீதம் வாங்கிதாக குறிப்பிடாமல் மொத்தமாக 40 சதவீதம் மதிப்பெண் வாங்கியுள்ளேன் என்று

குறிப்பிட்டுள்னேன் என்று சொன்னால் சரிதான். திருமணத்திற்கு முன்பாக பூனேவில் உள்ள A1 Technalogy ல் வீட்டிலிருந்தே ஆன்லைன் மூலம் வேலை செய்து வந்தேன். அந்த நிறுவனத்திற்கு ஆட்களை வேலைக்கு எடுக்கும் பணி செய்து வந்தேன். எனது மாத சம்பளம் வங்கி கணக்கில் வரும். எனது மாத சம்பளம் ரூ.30,000/- ஆகும். திருமணம் முடிந்த பின்பு எவ்வளவு நாள் வேலைக்கு சென்றேன் என்றால், திருமணம் நடந்த அன்றே எனக்கு வேலை இல்லை. எனது வங்கி கணக்கையோ, சம்பள பில்லையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னை வேலையை விட்டு எடுத்த ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்பித்துள்ளேன். மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் படி ஜீவனாம்ச வழக்குகளில் கடந்த 3 வருடத்திற்குரிய வங்கி வரவு செலவு கணக்கு அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், நான் மனுதாரருக்கு ஜீவனாம்ச தொகை கொடுக்ககூடாத நோக்கத்தில் மேற்கண்ட வங்கி பரிவர்தனை அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் திருமணத்திற்கு மூன்பாக வேலைவிட்டு நீக்கிவிட்டதாக கூறியுள்ளேன். திருமணம் 23.01.2022 அன்று நடைப்பெற்றது. 31.07.2023 அன்று வேலையிலிருந்து நீக்கப்பட்ட உத்தரவு வழங்கபட்டுள்ளது என்றால் அது வேறு நிறுவனம் ஆகும். எனது பிரமாண வாக்குமூலத்தில் திருமணத்திற்கு பிறகு எனக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதால் திருமணத்திற்கு பிறகு நான் வேலைக்கு செல்லவே வில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்திலும், எதிருரையிலும் திருமணத்திற்கு முன்பாக நிரந்தர வேலைக்கு சென்றேன் என்றும், திருமணத்திற்கு பிறகு தற்காலிக வேலைக்கு சென்றேன் என்றும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரர் கல்வியில் 96 சதவீதம் மதிப்பெண் பெற்றுள்ளதாக கூறியுள்ளேன். அதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை, தற்போது தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் என்னிடம் எந்த ஆவணமும் இல்லை எனது உறவினரிடம் மனுதாரர் சொன்னதன் பேரில் சொன்னேன். பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரருக்கு ரூ.17,000/- செலவில் செல்போனும், 4 கிராம் தங்க நகையும் வாங்கி பரிசலித்தாக சொல்லியுள்ளேன். ஆனால் மேற்கண்ட தகவலை சொத்து மற்றும் கடன் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அது திருமணத்தின் போது பரிசாக கொடுத்ததால் சொத்து மற்றும் கடன் அறிக்கையில் சொல்லவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் ரூ.15,000/- க்கு கொலுசும், புடவையும் எடுத்து கொடுத்தேன் என்றும், ரூ.10,000/- மனுதாரர் தரப்பில் எனக்கு ஆடை எடுத்துக்கொள்ள கொடுத்தார்கள் என்றும் சொல்லியுள்ளேன். அதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனது சொத்து மற்றும் கடன் விவர அறிக்கையில் மனுதாரர் பாரத் கேஸ் ஏஜென்சியில் வேலைசெய்து கொண்டு மாதம் ரூ. 15,000/- சம்பளம் பெறுவதாக குறிப்பிட்டுள்ளேன். அதற்கு எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் சொல்லியதன் பேரில் தான் எனக்கு தெரியும். மனுதாரர் ஆவடி, லேக் பார்க்கில் வைத்து 2021 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் சொன்னார் எந்த தேதி என்று ஞபாகம் இல்லை. திருமணத்திற்கு பிறகு கூட்டுகுடும்பமாக வசித்து வந்தோம். திருமணத்திற்கு பிறகு பகுதி நேர வேலை செய்ததாக நான் சொல்லவில்லை. தற்காலிக முழுநேர வேலை செய்து வந்தேன். அதில் எனக்கு மாதம் ரூ.60,000/- சம்பளம் கிடைத்தது. மேற்கண்ட தற்காலிக முழுநேர வேலைகுறித்து எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, சரியாக தெரியவில்லை. திருமணத்திற்கு பின்பு மனுதாரரை வெளியே கூட்டி சென்றுள்ளேனா என்றாலும், செலவிற்கு மாதம் பணம் கொடுத்துள்ளேனா என்றால் வெளியே கூட்டி சென்றுள்ளேன். பணம் கொடுத்துள்ளேன். மனுதாரர் என்னுடன் திருமணத்திற்கு

பிறகு 8 நாட்கள் மட்டும் சேர்ந்து இருந்தார். அப்போது படத்திற்கு அழைத்து சென்றேன். துணிமணி வாங்கி கொடுத்தேன். செலவிற்கு பணம் கொடுத்தேன். பிரமாண வாக்குமூலத்தில் எனது மனையிடம் IBM நிறுவனத்தில் வேலைக்கு Refference வந்திருப்பதாகவும், அந்த வேலைக்கு மனுதாரார் செல்கிறாரா என்று கேட்டேன். அதற்கு எந்த ஆதாரமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. திருமணத்திற்கு பிறகு மனுதாரர் ஞாபக மறதி, காது சரியாக கேட்காது, கண் பார்வை குறைபாடு ஆகிய நோய்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். அதற்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்றேனா என்றால் அவர் ஒத்துழைக்கவில்லை. மேற்கண்ட குறைபாடுகளுக்கு மருத்துவ சான்று எதுவும் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 2023 ஆம் வருடம் ஜீன், ஜீலை மாதத்திலிருந்து நான் வேலைக்கு செல்வதை முற்றிலும் நிறுத்திவிட்டேன். மனுதாரர் என்னை விட்டு என்போது பிரிந்து சென்றார் என்றால் திருமணம் முடித்த 8 நாட்கள் மட்டும் என்டன் இருந்தார். திருமணம் முடிந்தது 5, 6 தேதிகளில் சென்றுவிட்டார். பிரிந்து போனதற்கு பின்பு மனுதாரருக்கு பணம் கொடுத்துள்ளேன். எது எவ்வளவு என்று தெரியவில்லை. வங்கி கணக்கு மூலம், நேரடியாகவும் மனுதாரருக்கு பணம் கொடுத்துள்ளேன். எனக்கு சிறுநீரக கோளாரு உள்ளதாக சொல்லியுள்ளேன். அதற்கு டையாலிசிஸ் செய்து கொண்டுள்ளேனா என்றால் மாத்திரை மூலம் குணப்படுத்திவருகிறேன்.

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur